# +2 முக்கிய வினாக்கள்

வி.அசிசி பிரான்சிஸ்
எம்.ஏ;எம்.எட்;எம்.ஃபில்;டி.எட்
கன்னியாகுமரி

## செய்யுள் பெரு வினாக்கள்

1 எக்காரணங்களால் தமிழன்னையை வாழ்த்துவம் ?
2 தலைவனிடம் தோழி வரைவு கடாயது- விளக்குக
3 பொறையுடைமையின் சிறப்பு யாது ?
4 இராசராசனின் வாள் வில் கொடி குடை முரசு -விவரி
5 தலைவி மேகத்திடம் மொழிந்த தூது மொழிகள்யவை ?
6 நயினார் பதத்துணை போற்றுவோர் அடைவன யாவை ?
7 நற்றாய் காக்கைக்கு பராய்க்கடன் உரைத்தது விவரி
8 எவ்வெண்ணத்தைக் கைக்கொள்ள வேண்டும் ?
9 சிக்கனத்தால் வரும் பயன்கள் யாவை
10 தென் கரை நாட்டின் வளம் யாது ?
11 பெருமாள் உறை திருவேங்கடபதி -விளக்குக
12 நாயினேன் மறந்து என்னினைக்கேனே-விவரி
13 அறிவின் இலக்கணம் யாது ?
14 குலசேகரர் வேண்டுவதும் வேண்டாததும் யாவை ?
15 சுவடிச்சாலையில் இருக்க வேண்டிய நூல்கள் யாவை ?
16 நன்றே நம்பி குடி வாழ்க்கை - நயம் விளக்குக
17 பரித்தியாகப் பெருமானுக்கு அஞ்சலி -விளக்குக
18 சுரதா ஓர் உவமைக்கவிஞர் -விவரி
19 அருக தேவனை நீலகேசி எவ்வாறு வழிபட்டார் ?
20 சிக்கனம் - பட்டியலிடுக
21 மணீமேகலாத் தெய்வம் புத்தரைப் போற்றியது-விளக்குக
22 அறிவுடயார் இலக்கணம் யாது ?
23 பயனில்லாத முதுமையுடையார் எப்பொழுது இரங்குவர்?
24 வினைமேற்சென்ற தலைவனிடம் பாணன் கூறியது-விவரி
25 வரைவு நீட்டித்தவிடத்து தலைமகள் சொல்லியன-விவரி
26 தாவீதன்கோலியாத்துக்குஉரைத்த மறுமொழி யாது?
27 "அந்தாதி"-விளக்குக
28 கோலியாத்து வெகுண்டு உரைத்தன யாவை?
29 பேழையை மீட்க அன்னம் எவ்வாறு வேண்டினாள்?
30 கணையாழி கண்ட சீதையின் நிலை யாது?
31 தாவீது கோலியாத்தை வென்றமை யாங்ஙனம்?
32 கண்ணகியைக் கண்ட ஊரவர் கூறியன யாவை?

## நெடு வினாக்கள்

1 செய்நன்றியறிதல்-வள்ளுவர் கூறுவன யாவை?
2 அறிவுடைமை கருத்துக்களை தொகுத்தெழுது
3 பொறையுடைமை குறித்து எழுதுக
4 வினைத்திட்பம் - விளக்குக

## குறிப்பு வரைக

1) அகநானூறு 2) புறநானூறு 3) நற்றிணை 4) திருக்குறள் 5) கம்பர் 6) கபிலர் 7) பாரதியார்
8) பாரதிதாசன் 9) வீரமாமுனிவர் 10) இளங்கோவடிகள்

அஸிஸி

## மனப்பாடப்பகுதி

1 நண்ணுமிளமை...(வரதநஞ்சயப்பிள்ளை)-நாட்டுப்புறச்சிந்து
2 மனிதரெல்லாம்...(பாரதிதாசன்)-எண்சீர் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்
3 ஒன்றேயென்னின்...(கம்பர்)-அறுசீர் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்
4 வெல்வை...(வீரமாமுனிவர்)-கலித்துறை
5 கண்டனென்...(கம்பர்)-அறுசீர் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்
6 பல்சான்றீரே...(நரிவெரூவுத்தலையர்)-நேரிசை ஆசிரியப்பா
7 விற்பெருந்தடந்தோள்வீர...(கம்பர்)-அறுசீர் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்
8 ஏமவெற்பென்று...(குமரகுருபரர்)-எழுசீர் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்
9 உரைநடையின் ...(சுரதா)-எண்சீர் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

## விடை தேர்க

1 அறத்துப்பால் அதிகாரங்களின் எண்ணிக்கை-(38)
2 இராமாயணத்துக்குக் கம்பர் இட்ட பெயர்-(இராமாவதாரம்)
3 கம்பரை ஆதரித்த வள்ளல்-(சடையப்ப வள்ளல்)
4 வரத நஞ்சயப்பபிள்ளை பெற்ற பரிசு-(தங்கத்தோடா)
5 தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத்தலைவன்-(முருகன்)
6 நாமக்கல் கவிஞருக்கு நடுவண்அரசு வழங்கிய விருது-(பத்மபூசன்)
7 கம்பர் காலத்தில் வாழ்ந்த புலவர் -(ஒட்டக்கூத்தர்)
8 ஒன்றேயென்னின் கடவுள் வாழ்த்து அமைந்தது-(யுத்த காண்டம்)
9 புறநானூற்றின் திணைகள்-(11)
10 தமிழர் வாழ்வியல் சிந்தனை நூல்-(புறநானூறு)
11 புறம் ,புறப்பாட்டு என வழங்கப்பெறுவது--(புறநானூறு)
12 புறநானூற்றில் குறிப்பிடப்பெற்ற துறைகள்-(65)
13 தொல்காப்பிய இலக்கியங்களாய் திகழ்பவை-(சங்கநூல்கள்)
14 புறநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பாடியவர்-(பெருந்தேவனார்)
15 புறநானூற்றுப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்--(ஜி.யு.போப்)
16 அகநானூற்றைத் தொகுத்தவர்-(உருத்திரசன்மன்)
17 அகநானூற்றைத் தொகுப்பித்தவர்--(பாண்டியன் உக்கிரப்பெருவழுதி)
18 அகநானூற்றுக்கு வழங்கும் வேறுபெயர்-(நெடுந்தொகை)
19 அகப்புறப்பாடல் கொண்ட நூல்-(பரிபாடல்)
20 அகநானூற்றுப் பாடல்களின் அடிவரையறை-(13அடி முதல் 31அடி வரை)
21 மணிமிடைப்பவளப் பாடல்களின் எண்ணிக்கை-(180)
22 நற்றிணையைத் தொகுப்பித்தவன்-(பாண்டியன் மாறன் வழுதி )
23 நற்றிணைப் பாடல்களின் அடிவரையறை -(9அடி முதல் 12அடி வரை)
24 கபிலர் பிறந்த ஊர்-(திருவாதவூர்)
25 பாரி மன்னரின் அவைக்களப்புலவர்-(கபிலர்)
26 கபிலரின் பாட்டுத்திறனுக்குச் சான்று-(கபிலரது பாட்டு)
27 குறிஞ்சித்திணைப் பாடுவதில் வல்லவர்-(கபிலர்)
28 கபிலரை வாய்மொழிக் கவிஞர் எனப் போற்றியவர்-(நக்கீரர்)
29 குறுந்தொகைக்குக் கடவுள்வாழ்த்துப் பாடியவர்-(பெருந்தேவனார்)

30 ஐங்குறுநூற்றைத் தொகுத்தவர்-(கூடலூர் கிழார்)
31 ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தவர்-(சேரமன்னன் இரும்பொறை)
32 குறட்பா என்பது-( ஈரடி வெண்பா)
33 தமிழரசிக் குறவஞ்சியின் அரங்கேற்றத்தலைவர்-(ஞானியாரடிகள்)
34 திருக்குறளில் அமைந்துள்ள இயல்கள்-(9)
35 திருவள்ளுவர் வாழ்ந்த காலம் -(கி.மு.31)
36 பொருட்பா இயல்கள்-(அரசியல்,அங்கவியல்,ஒழிபியல்)
37 திருக்குறள் பெருமையை உணர்த்துவது-(திருவள்ளுவமாலை)
38 வள்ளுவனைப் பெற்றதால்...எனப்பாடியவர்-(பாரதிதாசன்)
39 சிலப்பதிகாரக் காண்டங்கள்-(மூன்று)
40 உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்-(சிலப்பதிகாரம்)
41 சிலப்பதிகார உரையசிரியர்களுள் ஒருவர்-(அரும்பத உரைகாரர்)
42 சிலப்பதிகாரத்தின் உட்பிரிவு-(காதை)
43 'வரி'என்பது-(இசைப்பாடல்)
44 தேனிலே ஊறிய...எனப்பாடியவர்-(கவிமணி)
45 கம்பநாடக யாப்பு வண்ணக்கணக்கீடு-(தொண்ணூற்றுஆறு)
46 கம்பராமாயண காண்டங்களின் எண்ணிக்கை-(ஆறு)
47 உத்தரக்காண்டத்தைப் பாடியவர்-(ஒட்டக்கூத்தர்
48 இராமாயணத்தின் ஐந்தாம் காண்டம்-(சுந்தரக்காண்டம்)
49 இராமாயணத்தில் சுந்தரன் எனப்படுபவன்-(அனுமன்)
50 சிறியத்திருவடி என அழைக்கப்பெறுபவன்-(அனுமன்)
51 'தனயை' என்பதன் பொருள்-(மகள்)
52 அனுமன் சீதையிடம் காட்டியது-(கணையாழி)
53 இராமன் மீட்டுச் செல்ல சீதை விதித்த காலம்-(ஒரு திங்கள்)
54 வீரமாமுனிவரின் தாய்நாடு-(இத்தாலி)
55 வீரமாமுனிவர் தொகுத்த அகராதி-(சதுரகராதி)
56 'கொன்ஸ்டான்'என்பதன் பொருள்-(அஞ்சாதவன்)
57 திருக்குறளை இலத்தீனில் மொழிபெயர்த்தவர்-(வீரமாமுனிவர்)
58 தேம்பாவணியின் பாட்டுடைத் தலைவன் -(சூசைமாமுனிவர்)
59 'கவிராட்சசன்,கவிச்சக்ரவர்த்தி' எனப்படுபவர்-(ஒட்டக்கூத்தர்)
60 'திவ்யகவி' எனப்படுபவர்-(பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்)
61 தமிழில் தோன்றிய முதல் கலம்பகம்-(நந்திக்கலம்பகம்)
62 புலன் இலக்கிய வகையைச் சார்ந்தது-(பள்ளு இலக்கியம்)
63 பதினெட்டு உறுப்புகளால் பாடப்படுவது-(கலம்பகம்)
64 பிரபந்தம் என்பதன் பொருள்-(நன்கு கட்டப்பட்டது)
65 முக்கூடல் பள்ளுவின் பாவகை-(சிந்துப்பா)
66 பாரதி தாசனின் 'பிசிரந்தையார்' பெற்ற விருது-(சாகித்ய அகாதெமி)
67 பாரதிதாசன் வெளியிட்ட இதழ்-(குயில்)
68 வாழ்வினில்செம்மை..பாடல் ஏற்றுள்ள அரசு-(புதுவை)
69 வடமொழியில் பாரதம் பாடியவர்-(வியாச முனிவர்)
70 பாஞ்சாலி சபதம் சருக்கங்களின் எண்ணிக்கை--(ஐந்து)
71 இருபதாம் நூற்றாண்டு இலக்கிய மறுமலர்ச்சியாளர்-(பாரதியார்)
72 நமக்குத் தொழில் கவிதை எனப்பாடியவர்-(பாரதியார்)
73 செந்தமிழை செழுந்தமிழாகக் காண விரும்பியவர்-(பாரதி தாசன்)
74 செவாலியெ விருது பெற்றக் கவிஞர்-(வாணிதாசன்)
75 கவிஞரேறு, பாவலர்மணி எனப் பாராட்டப்பெற்றவர்-( வாணிதாசன்)
76 தமிழ் வளர்ச்சித் துறை பரிசுப் பெற்ற சுரதாவின் நூல்-(தேன் மழை)
77 தமிழன்னை விருது பெற்றவர்-(அப்துல்குமான்)
78 உவமைக் கவிஞர் எனப்படுபவர்-(சுரதா)
79 கிறிஸ்தவக் கம்பர் எனப்படுபவர்-(எச்.ஏ. கிருட்டினப்பிள்ளை)
80 சின்னச்சீறா எழுதியவர்-(பனூ அகுமது மரைக்காயர்)
81 ஏழாம் திருமுறை என்பது-(சுந்தரர் தேவாரம்)
82 திவ்யபிரபந்த உரையாசிரியர்-(பெரிய வாச்சான் பிள்ளை)
83 தம்பிரான் தோழர் எனப்படுபவர்-(சுந்தரர்)
84 சேக்கிழார் எழுதிய நூல்-(திருத்தொண்டர் புராணம்)
85 பாவேந்தர் பரிசு பெற்ற முதல் பாவலர்-(சுரதா)
86 கிறிஸ்தவக் கலைக் களஞ்சியம்-(தேம்பாவணி)
87 சிலப்பதிகாரம் , மணிமேகலை என்பது -(இரட்டைக் காப்பியங்கள்)
88 மணிமேகலையின் ஆசிரியர்-(சீத்தலைச்சாத்தனார்)
89 சுந்தரர் பிறந்த ஊர்-(திரு நாவலூர்
90 இறைவனால் சுந்தரர் ஆட்கொள்ளப்பட்ட ஊர்-(திருவெண்ணெய் நல்லூர்)

## திணை

| | | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| | **நிலம்** | (மலை) | (காடு) | (வயல்) | (கடல்) | (சுரம்) |
| **முதற்பொருள்** | **பெரும்பொழுது** | கூதிர் முன்பனி | கார் | ஆறு பொழுது | ஆறு பொழுது | வேனில் பின்பனி |
| | **சிறுபொழுது** | யாமம் | மாலை | வைகறை | எற்பாடு | நண்பகல் |
| **கருப்பொருள்** | **தெய்வம்** | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | துர்க்கை |
| | **மக்கள்** | குறவர் | இடையர் | உழவர் | பரதர் | மறவர் |
| | **உணவு** | தினை, மூங்கிலரிசி | வரகு | நெல் | மீன் விற்ற பொருள் | சூறையாடல் பொருள் |
| | **தொழில்** | தேன் எடுத்தல் | ஆநிரை மேய்த்தல் | நெல் அரிதல் | மீன் பிடித்தல் | வழிப்பறி |
| | **பறவை** | மயில் | கானக்கோழி | நீர்க்கோழி | நீர்க்காக்கை | பருந்து |
| | **விலங்கு** | புலி | முயல் | எருமை | சுறா | செந்நாய் |
| **உரிப்பொருள்** | | புணர்தல் | இருத்தல் | ஊடல் | இரங்கல் | பிரிதல் |

**பொதுவியல் திணை:** புறத்திணைகளில் கூறப்படாத செய்திகளையும் அகத்திணைகளுக்குப் பொதுவான செய்திகளையும் கூறுவது பொதுவியல் திணையாகும்.(**சான்று** - பல்சான்றீரே...)

**விளக்கம்:**முனிவரும் அவரைப் போன்றோரும் இம்மை மறுமைகளில் உறுதி பயக்கும் பொதுவான செய்திகளைக் கூறுவதால் பொதுவியல் திணையாயிற்று

# அணி

**உவமைஅணி** : உவமை,உவமேயம், உவமஉருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாக அமைந்தது உவமைஅணி ஆகும்
***சான்று***: அகழ்வாரை----------தலை (திருக்குறள்)
***விளக்கம்***:தம்மைத் தோண்டுபரையும் கீழே விழாமல் தாங்கிப் பிடிக்கும் நிலம் போல தமக்கு தீங்கு செய்து பழிப்பவரையும் பொறுத்தல் தலை சிறந்த அறமாகும் எனக் கூறுவதால் இது உவமைஅணி ஆகும்.

**எடுத்துக்காட்டு உவமை அணி**:உவமான,உவமேயங்களுக்கிடையே,உவம உருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும்
***சான்று***: இன்மையுளின்மை-----------பொறை(திருக்குறள்)
***விளக்கம்***: விருந்தினரை உபசரிக்க முடியாமல் வறுமைப்பட்டிருப்பது மிகவும் கொடியது.அறிவிலார் தவறைப் பொறுத்துக்கொள்ளுதல் வலிமைக்குள் சிறந்த வலிமை என்பதால் எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்

**உருவக அணி**: உவமைக்கும் பொருளுக்கும் இடையே உள்ள வேற்றுமையை நீக்கி இரண்டும் ஒன்றே எனக்கூறுவது உருவக அணி ஆகும்
***சான்று***: நீலப்பொய்கை------------தங்கத்தோணிகள்(மாலைக்கால வருணனை)
***விளக்கம்***:மேகத்தினை நீலப்பொய்கையில் மிதந்திடும்.தங்கத்தோணிகள் என்பதால் உருவக அணி ஆகும்.

**சொற்பொருள் பின்வருநிலையணி** :செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் வந்து, தந்த பொருளையே மீண்டும் தருவது சொல்பொருள்பின்வருநிலையணியாகும்.
***சான்று***: உதவி------------வரைத்து (திருக்குறள்)
***விளக்கம்***: உதவி என்னும் சொல் மீண்டும், மீண்டும் வந்து உபகாரம் என்னும் ஒரே பொருளைத் தந்ததால் சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்

**தற்குறிப்பேற்ற அணி**:இயல்பான நிகழ்ச்சியில் கவிஞன் தன் கற்பனையை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும்
***சான்று***: வாங்கிய ஆழி ------------கலசமாட்டி(கம்பராமாயணம்)
***விளக்கம்***: சீதையின் கண்ணீரால் நனைந்தது கணையாழி. இயல்பான இந்நிகழ்ச்சியை, இலங்கை வந்ததால் ஆயிரம் குடம் கண்ணீரால் சீதை தூய்மைப்படுத்தினாள் என்பதால் தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

**மடக்கணி**:ஒருமுறை வந்த சொற்றொடர் அல்லது அடி மீண்டும் மடங்கி வந்து வேறு பொருள் தருவது மடக்கணி ஆகும்
***சான்று***: திருவேங்கடத்து--------------இருந்தன(திருவேங்கடத்தந்தாதி)
***விளக்கம்***: வேங்கடத்து=வேங்கடமலை ,தருவேங்கடத்து=தரு+வேம்+கடத்து(மரங்கள் வெந்து அழிகின்ற காட்டில்) வருவேங்கடத்தும்பி=வருவேம்+கடம்+தும்பி (மதம் கொண்ட தும்பிக்கையுடைய யானை)என்பதால் மடக்கணியாகும்

**திரிபணி:**அடிதோறும் முதல் எழுத்து மட்டும் வேறுபட்டு, இரண்டாம் எழுத்து முதலாக தொடர்ந்து வரும் எழுத்துக்கள் ஒரேவகையாக நின்று பொருள் வேறுபடுவது திரிபணி ஆகும்.
***சான்று***: மறிப்புண்ட------------உண்டோ(கம்பராமாயணம்)
***விளக்கம்***: மறிப்புண்ட,நெறிப்புண்ட,பொறிப்புண்ட, பறிப்புண்ட என முதலெழுத்து தவிர மற்ற எழுத்துக்கள் ஒரேவகையாக வந்து பொருள் வேறுபட்டதால் திரிபணி ஆகும்

**மேலும் சில சான்றுகள்**

**உவமையணி:** அகழ்வாரை --------தலை(திருக்குறள்) ; கிடைத்த------------- காடே(மறுமலர்ச்சிப்பாடல்)
எல்லை-----------கண்டார்(தேம்பாவணி) ; பாராங்கல்-----------போகும்(மறுமலர்ச்சிப்பாடல்)
**தற்குறிப்பேற்ற அணி**:செம்பொன்-----ஊர்(சிலப்பதிகாரம் ; வாங்கிய ஆழி---------விண்டாள்(கம்பராமாயணம்)

---

## இலக்கணக்குறிப்பு

**வாழிய,செய்க-**வியங்கோள் வினைமுற்று ; **மறவற்க**-எதிர்மறை வியங்கோள்வினைமுற்று ;**எள்ளல்**-அல்லீற்று வியங்கோள் வினைமுற்று ;**வந்தவர், கூடினர்-** வினையாலணையும்பெயர் **அறிகல்லாதவர்** -எதிர்மறை வினையாலணையும் பெயர் **அறன்** –ஈற்றுப்போலி ; **கொத்துப்பூ ,கண்ணுதல்**- முன்பின் தொக்கப்போலி ;**குருகும்**- இழிவு சிறப்பும்மை ; **அந்திகாலை,வெய்யோன் திங்கள்** -உம்மைத்தொகை ;**பொன்னடி ,மலரடி,தாமரைக்கண்கள்-** உவமைத்தொகை **வையகமும்வானகமும், பேரோடும்புகழோடும்**- எண்ணும்மை ; **யாரும்,யார்க்கும்,யாரையும்** – முற்றும்மை ;**படூஉம்**- இசை நிறையளபெடை;**வளர்க்குறூஉம்-** இன்னிசையளபெடை ;**செலீஇய ,தழீஇய ,ஒரீஇ ,தீதொரீஇ**- சொல்லிசையளபெடை **அற்றம்,ஒரால்,தருதல்,கோறல், ஒல்காமை**-தொழில்பெயர் ; **கோள்**- முதல்நிலைதிரிந்த தொழில்பெயர் ; **சுற்றிய,ஆனாத**-பெயரெச்சம் ; **தீராத-** எதிர்மறைபெயரெச்சம்; ,**இன்னா, கதுவிடா-அவியா** - ஈறுகெட்டஎதிர்மறைபெயரெச்சம் ;**போற்றி,கண்டுளி**-வினையெச்சம்;**தூக்கார்-** முற்றெச்சம்;**எய்துப**-பலர்பால்வினைமுற்று ;**அறியீர்-** முன்னிலை எதிர்கால ஒருமைவினைமுற்று; ;**அளிக்குவென்,என்கோ**-தன்மை ஒருமைவினைமுற்று **துறத்தி,சொல்லுமின்**-ஏவல்வினைமுற்று ;**கெடும்-** செய்யும்எனும்வாய்ப்பாட்டுவினைமுற்று;**உணர்மின்,காணீர்**-ஏவல் பன்மை வினைமுற்று;**உண்டுகொல்**-ஐயப்பொருளில் வந்த இடைச்சொல்;**உம்பி-** முறைப்பெயர்;**பூவம்**-இடைக்குறை; **வல்விருந்து**-ஒருபொருட்பன்மொழி;**விருந்து**-பண்பாகுபெயர்;**காளை-**உவமையாகுபெயர்;**சோணாடு**-மரூஉ **காலத்தினால்**-உருபுமயக்கம்; **பசிக்கயிறு,கைம்மலை,மதிவிளக்கு,தங்கத்திமிங்கலம்**- உருவகம், **மாமணி,மாஞாலம்,வைவாள்,வைவேல்,கடிமகள்**-உரிச்சொற்றொடர்; **பசுங்கால்,பச்சூன்,கடும்பகை,கடுந்திறல்,பேரிஞ்சி, கூர்ம்படை,செழும்பொன்,சேவடி,நெடுந்தேர்,நெடுந்தொகை,பெருங்களிறு,பெருந்தெய்வம்,பேரிடி,பேரறிவு,பைந்நிணம், தண்குடை,வெஞ்சினம்,நல்லுரை,எண்பொருள்,மூதுரை,அருந்துயர், ஆருயிர்**,--பண்புத்தொகை;**உயர்சினை,ஈர்வளை, படர்முகில்,முதிர்மரம், செய்குன்று,அலைகடல், திரைகவுள்,உயர்எண்ணம்,புனைகலம்,திருந்துமொழி,ஒழுகுநீர்,களிநடம், அகல்முகில், பொங்குதாமரை,தாழ்பிறப்பு**—வினைத்தொகை; **வண்டுறைஓதியும்வலியன்** –வினைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; **அன்புநெறி,கைத்தலம்,மெய்ப்பொருள்**-இருபெயரொட்டுப்பண்புத்தொகை;**அடிவாழ்த்துவம்-** இரண்டாம் வேற்றுமைத்தொகை;**என்மகன், கன்னிபாலன்**—நான்காம் வேற்றுமைத்தொகை;**பதத்துணை**--ஐந்தாம் வேற்றுமைத்*தொகை;***கைவயம்,மனத்திட்பம்,களிற்றுமருப்பு,புல்நுனி** -ஆறாம்வேற்றுமைத்தொகை ;**பகலுறை,இற்பிறப்பு** -- ஏழாம்வேற்றுமைத்தொகை **சிறைப்பறவை,முள்ளிலை,வாள்வேந்தன்,வேற்காளை,முட்புதர்**-இரண்டாம்வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்கத்தொகை ;**மாலைமதி**-ஐந்தாம்வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்கத்தொகை **காற்சிலம்பு,போர்முரசம்,வேங்கடமாயவன்** --ஏழாம் வேற்றுமைஉருபும் பயனும் உடன் தொக்கத்தொகை **வாழ்த்துவம்**—தன்மை பன்மை எதிர்கால வினைமுற்று..

---

## பொருத்துக

| | | |
|---|---|---|
| குறிஞ்சி-கபிலர் | இளங்கோவடிகள் —சிலப்பதிகாரம் | திருவேங்கடத்தந்தாதி--பிள்ளைப்பெருமாள் |
| முல்லை-பேயனார் | நாதகுத்தனார் -வளையாபதி | மதுரைக்கலம்பகம்--குமரகுருபரர் |
| நெய்தல்-அம்மூவனார் | சீத்தலைச்சாத்தனார்-மணிமேகலை | முக்கூடற்பள்ளு--பெயர்தெரியவில்லை |
| அழகின் சிரிப்பு-பாரதிதாசன் | பால்வீதி--அப்துல்ரகுமான் | சிக்கனம்—சுரதா |
| குயில்பாட்டு—பாரதியார் | புத்தகசாலை—பாரதிதாசன் | காடு—வாணிதாசன் |
| துறைமுகம்—சுரதா | தீக்குச்சிகள்--அப்துல்ரகுமான் | திருக்குறள்—திருவள்ளுவர் |

## இடம் சுட்டுக

நல்லது செய்தலாற்றீராயினும்--------
அஞ்சிலோதியை வரக்கரைந்தீமே-------
நெடுந்தேர் ஊர்மதி வலவ------
கடமை புரிந்தான் இவனே----
முயலாமே இத்தனை நாள் இருந்தீர் போலும்---------
குருகுமுண்டு தான் மணந்த ஞான்றே--------
முச்சங்கம் வளர் கூடலில் சென்று புகலீர்-----
காதற் கணவனைக் காண்பேன் ஈதொன்று--------
எத்தனை பெரிய கரும்பூதம்-----
பதியெறிந்த கொற்ற வாள் பாரீர்-----

(மேற்கண்ட தொடர்களைப் போல வருவனவற்றிற்கு **யார் யாரிடம் கூறியது?ஆசிரியர் பெயர்**,-------என வரும் வினாக்களுக்குத் தக்கப் பயிற்சி எடுத்துக் கொள்க)

## உரை நடைப் பெருவினாக்கள்

1

.செந்தமிழ் மொழி,கொடுந்தமிழ் மொழி -விவரி
2 .நாடகத்தமிழின் சிறப்பியல்புகள் யாவை?
3 .தமிழ்ப் பற்றில்லா தமிழ் மக்கள்-கடிந்துரைக்க
4 உள் நாட்டு மொழியும், தமிழும்- ஒப்புமைப் படுத்து
5. தமிழ் உயர்மொழி ,தனிமொழி ஏன்?
6 இசைத்தமிழ் என்பது யாது ? இசைத்தமிழ் நூல்கள் எழுது .
7 செம்மொழியின் இலக்கணம் யாது ?தமிழுக்குப் பொருந்துமா ?
8 உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணம் யாது ?
9 நாடு எனும் பற்றால் சமரசத்தை இழத்தல்-விவரி
10 சாதிக்கொடுமை ,சமயவெறி சமரச உணர்வைக் குலைக்குமா ?
11 கோலரிட்ஜ்,வேர்ட்ஸ்வொர்த் தரும் கவிதை விளக்கம் யாது?
12 கவிதைக்குரிய நல்லியல்புகள் யாவை ?
13 பெருங்கொலை எது ?ஏன் ?
14 விரவுப்பெயராக சொல்லப்படுவன மாடுகளின் பயன் கருதியே- விவரி
15.விறலுடைய இளைஞர்க்கு மாடு உவமை-விளக்குக
16 ஆவின் சிறப்புகள் யாவை ?
17 அறுமுறை வாழ்த்து -விவரி
18 நீதி நூல்களின் பொதுவான இயல்பு யாது ?
19 இறந்தும் உயிர் வாழ்தல்- குறட்பா நயம் கூறுக.
20 முதல் தடுமாற்றம் மு. வ. கருத்து யாது?
21 கீட்ஸ், ஜான் ரஸ்கின்,பவணந்தி கூறும் கவிதை இயல்புகள் விவரி.
22 மக்கள் நாகரிகம்,, மாடு-தொடர்பு யாது ?
23 மாடு என்பது செல்வம்- காரணம் கூறு,
24 "ஆ" தெய்வத்தன்மையுடையதா ? -விளக்குக
25 ஆயன் என்பதே "கோ" எனப்பட்டது-விவரி .
26 கவிதையின் நோக்கம் யாது ?
27 உவமைகளைக் கையாள்வதில் வள்ளுவரின் நயம் விவரி
28 செல்வம் நிலைபேறுடையதன்று -விளக்குக
29 முன்னேற்றம் - மு.வ. கூற்றை விவரி.
30 தேர்தலும் ஒரு தடுமாற்றமே -விளக்குக
31 ஒருபடி முன்னேற்றம் - விவரி.
32 ஏற்றத்தாழ்வில்லா சமுதாயம் காண வழிகள் யாவை ?

---

## நெடு வினா

1 இயல், இசை, நாடகம்- முத்தமிழ் விளக்கம் தருக.
2 இராமலிங்க அடிகளாரின் சமய உணர்வு விளக்குக
3 தமிழ் உயர் தனிச்செம்மொழி -விவரி
4 கவிதை இன்னது- விளக்குக
5 தமிழ் மக்கள் ஒற்றுமை உணர்வு, ஈகை- விவரி
6 கவிதையின் இலக்கணம் மேனாட்டு அறிஞர் கருத்தினை எழுது.
7 நாடு, சமயம், சாதி சமரச உணர்வைக் குலைக்குமா ?விவரி.
8 பண்டையத் தமிழ் மக்கள் நனி நாகரிகர்-விளக்குக.

## பழமொழி- வாழ்க்கை நிகழ்வில் அமைத்தல்

சான்று: ***சிறு துளி பெருவெள்ளம்:-***இராமு ஒரு ஏழை மாணவன்,சேமிக்கும் பழக்கம் கொண்டவன்,தன் தந்தையார் மற்றும்,வீட்டிற்கு வரும் விருந்தினர்கள் தரும் காசுகளைச் சேர்த்து வைத்தான்.அவன் பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றதும் கல்லூரியில் படிக்க வேண்டும் என அவனது தாயார் ஆசைப் பட்டார்.தந்தையாரோ இராமுவைக் கல்லூரியில் சேர்ப்பதற்கு பணம் இல்லையே என மிகவும் வருத்தத்துடன் காணப்பட்டார்.பலரிடம் பணம் கேட்டுப் பார்த்தும் கிடைக்கவில்லை.தந்தையின் கவலையை தாயார் மூலமாக அறிந்துகொண்ட இராமு தந்தையிடம் வந்து தான் சேர்த்து வைத்திருந்த பணத்தைக் கொடுத்தான்,தந்தை தனக்குத் தந்த காசுகளை செலவழிக்காமல் சிறுகச் சிறுகச் சேர்த்தது பற்றி விவரமாகக் கூறினான். **'சிறுதுளி பெருவெள்ளம்'** போல் மகன் சேர்த்த பணத்தைக்கண்டு தந்தையார் ஆனந்தக் கண்ணீருடன் இராமுவைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டார்.
**(இது போன்று தரப்படும் பழமொழிகளுக்கு ஏற்றவாறு விடை எழுதிப்பழகுக)**

---

## துணைப்பாடம்

1 பால்வண்ணம் பிள்ளை (புதுமைப்பித்தன்) –முன்னுரை-பண்புநலன்
–குடும்பநிலை—பசுமாடு—பிடிவாதம்—விற்பனை—முடிவுரை—நீதிக்கருத்து .
2 மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து (வல்லிக்கண்ணன்)—முன்னுரை--ஊர்வழக்கம்---மனநிலை--
—பௌர்ணமி விருந்து --ஊர்மரபு—மூக்கப்பிள்ளைமுடிவு--முடிவுரை—நீதிக்கருத்து.
3 மகன் (பா.செயப்பிரகாசம்)—முன்னுரை—பண்ணைபுரம்--அன்னகாமுவின் மகன்—
தந்தை மனநிலை—குளிப்பாட்டல்—சுடுகாடு---முடிவுரை—நீதிக்கருத்து .
4 வேலி (ராஜம் கிருஷ்ணன்)—முன்னுரை—மாலதி--கோமதி.--மங்களத்தம்மாள்—
உறவினர்--வேலியும்முள்ளும்—முடிவுரை- நீதிக்கருத்து.
5 சட்டை--(செயகாந்தன்) -- சாமியார்--தொண்டர்-செட்டியார்மனைவி--பட்டாளத்துப்பிள்ளை—
சோமனாதன்-சாமியார்செயல்—முடிவுரை—நீதிக்கருத்து.

## கற்பனைக் கதை எழுதுதல்

1 ஒவ்வொரு கல்லாய்-(கந்தர்வன்)-இக்கதையில் நும் மனம் கவர்ந்தவரை திறனாய்வு செய்க.
2 மண் (அய்க்கண்)கதைமாந்தர் திறனாய்வு செய்க.
3 கிட்டு தன் தமயன் செய்த உதவியால் வாழ்வில் உயர்ந்ததாக கதை எழுது.
4 உல்லாசப்பயணம் செல்ல தடை ஏற்பட்டதாக கதை எழுது.
5 நேர்மை தவறாத மாணிக்கம் வாழ்வில் உயர்ந்ததாக கதை எழுது

---

## தமிழாக்கம்

கல்விக் கரையில;கற்பவர் நாள் சில.—Art is long and life is short
சிறுதுளிப் பெருவெள்ளம். ---A penny saved is a penny gained
மின்னுவதெல்லாம் பொன்னல்ல---All that glitters is not gold
ஆபத்தில் உதவுபவனே அருமை நண்பன்—A friend in need is a friend indeed
குரைக்கிர நாய் கடிக்காது.--Barking dogs seldom bite
புயலுக்கு முன் அமைதி.—Calm before the storm
எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றாதே--Do not add fuel to the flame
மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி--As is the king so are his subjects
பேராசை பெருநட்டம்—Covert all lose all
எலி வளையானாலும் தனி வளை வேண்டும் --East or west home is the best
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்—Face is the index of the mind
பதறிய காரியம் சிதறும்---Haste makes waste
அறிவு ஆற்றல் மிக்கது---Knowledge is power
பணம் பத்தும் செய்யும்---Money makes many things
நெருப்பின்றிப் புகையாது—No smoke without fire
தனிமரம் தோப்பாகாது---One flower makes nog garland
வருமுன் காத்தலே நல்லது—Prevention is better than cure
தன் கையே தனக்குதவி---Self help is the best help
காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்---Strike while the iron is hot
ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்காது----Time and tide wait for none
மனமிருந்தால் மார்க்கமுண்டு---Where there is will there is a way
ஒற்றுமையே பலம்---Union is strength
இளங்கன்று பயமறியாது—A young calf knows not fear
ஆசை வெட்கமறியாது---Desire knows not shame
ஆழம் தெரியாமல் காலை விடாதே---Look before you leap
குறைகுடம் கூத்தாடும்---Empty vessels makes more noise
உழைப்பின்றி ஊதியமில்லை---No rains no gaines
பழகப்பழக பாலும் புளிக்கும்---Familiarity breeds contempt

## பிறமொழிச் சொல் நீக்குதல்

**நமஸ்காரம்**-வணக்கம் ; **சாஷ்டாங்கமாக**-நெடுஞ்சாண்கிடையாக ; **ஆசீர்வதித்தேன்** -வாழ்த்தினேன் ; **நாமகரணம்**-பெயர் ;**சந்தோஷம்**-மகிழ்ச்சி ; **அத்யந்த**-நெருங்கிய ; **ஸ்நேகிதன்**- நண்பன்
**பந்துமித்ரர்**-உறவினர் ,நண்பர்கள் ; **வதுவரர்**-மணமக்கள் ; **ரதோஸ்தவம்**-தேரோட்டம் ; **பிரயாணி**-பயணி
**ஸகல காரியாலயம்**-எல்லா செயலகம் ; **ரத்துசெய்தல்**-விலக்குதல்; **பட்டுவாடா**-திரும்பக்கொடுத்தல்
**தாக்கல்செய்த**-தொடுத்த ; **சுமுகமாக**-நல்லமுறையில்; **பைசல்**-முடித்தல்;**தலா**-ஒவ்வொரு; **சீரியல்**-தொடர்
**புஸ்தகம்**-புத்தகம்; **டி.வி.யில்**-தொலைக்காட்சியில்; **லைஃப்**=வாழ்க்கை;**போர்**-வெறுப்பு;**செஞ்சுரி**-நூற்றாண்டு
**டென்ஷன்**-பதற்றம்; **ஸ்லிம்**-மெலிவு; **பியூட்டி**-அழகு; **வீக்**-வலிவற்ற;**ஆன்டி**-அத்தை;**ரெஸ்ட்**-ஓய்வு;
**ஹார்ட்**-இதயம்; **ஸ்பெஷலிஸ்ட்**-நிபுணர்;**அட்வைஸ்**-அறிவுரை;**பேஷண்ட்**-நோயாளி; **ஸ்வீட்**-இனிப்பு;
**டயாபெட்டிக்**-நீரிழிவு;

## கொச்சைச்சொல் நீக்குதல்

**அப்பிசி**-ஐப்பசி ;**அடமள**-அடைமழை ;**இம்பாங்க** -என்பார்கள் ;**கோளி முட்டை** -கோழிமுட்டை ;
**வெடியங்காட்டியும்** –விடிவதற்குள் ;**வெத்திலை** –வெற்றிலை ;**போடறது**- போடுவது ;**பளக்கமா** -பழக்கமா ;
**சேதியை**- செய்தியை ; **கோர்வையாய்**- கோவையாய் ;**ஒண்டியாய்**- ஒன்றியாய் ; **ஊர்கோலமா** -ஊர்வலமா;
**நெத்தியில்** –நெற்றியில் ;**திருநீர்** -திருநீறு ;**சீயக்காய்** –சிகைக்காய் ;**பத்துரவு** -பற்றுவரவு ;**கொடக்கூலி** -குடிக்கூலி
**ஊட்டுக்கு**- வீட்டுக்கு;**அண்ணாக்கயிறு**-அரைஞாண்கயிறு ;**ஊர்சுத்து**- உகிர்சுத்து ;**சாயந்தரம்**-சாயுங்காலம் ;
**சித்தநாழி**-சிறிதுநேரம் ;**வந்திடறேன்**- வருகிறேன் ;**மானம்பாத்த**- வானம்பார்த்த ;**மழ**-மழை ;**வருஷம்**- வருடம் ;

## வாக்கியப்பிழை நீக்குதல்

**அவர்தான்கூறினார்**-அவர்தாம்கூறினார்;**சிலைஅன்று**-சிலைஅல்ல ;**இடதுபக்கம்**-இடப்பக்கம்;**முருகன் மற்றும் வேலன்** -முருகன்,வேலன் ஆகியோர்;**நல்லவையும்,கெட்டவையும்**-நல்லனவும்,கெட்டனவும்;**ஒருபழமே நல்லன**-ஒருபழமே நல்லது ;**இவர்அல்லவா**-இவர்அல்லரோ;**பலஅறிஞர்கள்**- அறிஞர்பலர் ;**ஒவ்வொருசிற்றூர்களிலும்**-ஒவ்வொருசிற்றூரிலும்;
**ஏறிகலில் மலைநீர்**-ஏரிகளில் மழைநீர் ;**சேமித்தாள்**-சேமித்தால் ;**கினருகலில்**-கிணறுகளில் ;**ஆளமரத்தின்** -ஆலமரத்தின் ;
**விளுது**-விழுது ;**குறங்கு**-குரங்கு ;**வென்னி**-வெந்நீர் ;**எண்ணை**-எண்ணெய் ;**பெறுவாரியான** –பெருவாரியான ; **மக்கல்**-மக்கள் ;**உல்லார்கலே** -உள்ளார்களே;

## இலக்கிய நயம் (செய்யுள் நயம் அல்லது ‘ பா’ நயம்) பாராட்டல்

(இலக்கிய நயம் பாராட்டல், முன்னுரையில் ஆசிரியர் குறிப்பு கட்டாயம் எழுத வேண்டும்)

**முன்னுரை**:இருபதாம்நூற்றாண்டின்இணையற்றகவிஞர்--------,இவரதுதந்தையார்----------,தாயார்-------------;இவர்---------மாவட்டம்-------------ஊரில் பிறந்தார்.இவரது பாடல்களின் இனிமையும் எளிமையும் அழகுணர்ச்சி மிகுந்த கருத்துக்களும் இவருக்கு------என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றுத் தந்தது.இவரது இப்பாடலில் காணப்படும் இலக்கிய நயங்களை ஈண்டுக் காண்போம்.

**மையக்கருத்து:** ***‘வாழைக்குக் குருத்து; செய்யுளுக்கு மையக்கருத்து’*** எனும் சான்றோர் கூற்றுக்குஏற்ப இப்பாடலில் ------------ மையக்கருத்தாக வந்துள்ளது.

**திரண்டக்கருத்து**:( பாடலை பலமுறை படித்து அரை பக்க அளவில் தெளிவுரை எழுதுக)

**தொடை நயங்கள்:** ***‘தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்’*** என்பதற்கேற்ப இப்பாடலில் மோனை,எதுகை,இயைபு, முரண் போன்ற தொடை நயங்கள் சிறப்பாக அமைந்துள்ளன. அவற்றை ஈண்டுக் காண்போம்

(அ) **எதுகை:** ***‘எது கை கொடுக்காவிட்டாலும் எதுகையாவது கொடுக்க வேண்டும்’*** என்பதற்கேற்ப-------,--------- எனும் சொற்களின் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வந்து எதுகைத்தொடை நயம் தந்தது இன்புறத்தக்கது .

(ஆ) **மோனை: ‘குயவனின் கை வண்ணம் பானையிலே;கவிஞனின் கை வண்ணம் மோனையிலே’** என்னும் கருத்துக்கு ஏற்ப --------,---------எனும் சொற்களின் முதல் எழுத்து ஒன்றுபோல் வந்து மோனைத் தொடையானது.

(இ) **இயைபு**: **‘பாடலின் இயைபு படிப்போர்க்கு வியப்பு’** இப்பாடலின் சீர்கள்தோறும் இறுதி எழுத்துக்களான ----------,----------ஒன்றுபோல் வந்து இயைபுத்தொடையாகி இன்பமூட்டுகிறது.

(ஈ) முரண்: ***‘முரண் செய்யுளுக்கு அரண்’*** என்பர்.இப்பாடலில் ------------,-----------எனும் சொற்கள் மாறுபட்டு எதிர் எதிரான பொருள் தந்தாலும் பாடலுக்கு மெருகூட்டுகிறது

**சந்தநயம்:** ***‘சந்தம் தமிழுக்குச் சொந்தம்’*** இப்பாடல்-----------சீர்களால் அமைந்து ----------,----------எனும் சொற்கள் திரும்பத்திரும்ப வந்து சந்தநயம் தந்தது

**அணிநயம்:** ***‘அணியில்லாப்பாட்டு நகையில்லா நங்கைப்போல்’*** எனும் கருத்துகேற்ப இப்பாடலில் ------------------ அணி அமைந்து செய்யுளுக்கு அழகூட்டுகிறது

**உவமை நயம்** :படிப்போர்க்கும், கேட்போர்க்கும் இன்பம் தரும் விதத்தில் இப்பாடலில்-------------,------------- எனும் சொற்கள் அமைந்து உவமை நயம் தந்தது

**உருவகம்:**இப்பாடலில் ------------,------------எனும் சொற்கள் உருவகமாகி பாடலுக்கு சிறப்பு செய்தது.

**கற்பனை நயம்:** கவிஞன் என்பவன் கற்பனைத்திறம் மிக்கவன் . இப்பாடலில் கவிஞர் தமது கற்பனைத் திறத்தால் ------------,-----------எனும் சொற்களை அழகுபட வைத்துள்ளார்.

**சுவைநயம்**: இப்பாடலின் ஒவ்வொரு வரிகளும் கை தட்டி, தாளமிசைத்துப் பாடுவதற்கு ஏற்ற முறையில் ,மனதிற்கு மகிழ்ச்சி உண்டாகும் படி---------------சுவை கொண்டதாய் அமைந்துள்ளது.

**முடிவுரை**:இப்பாடலின் ஆசிரியர் தமது எண்ணத்தில் எழுந்த கருத்துக்களை தமிழுணர்வு பொங்க சிறப்பாக அமைத்திருப்பது கவிதைக்கும் அழகூட்டுகிறது;அதைக்கேட்போர்க்கும் இன்பமூட்டுகிறது;சமுதாய மாற்றத்துக்கும் நல்ல வழிகாட்டுகிறது..

**என் கருத்து:** எழுத்தில் இனிமை; கருத்தில் புதுமை; படிப்பதற்கேற்ற எளிமைமிக்க இப்பாடலின் வரிகள் ஒவ்வொன்றும் உள்ளத்திற்கு இன்பமூட்டி,மனதிற்கு மகிழ்ச்சி தருவதால் நல்ல கவிதைகளை நாமும் படிப்போம் மற்றவர்களையும் படிக்கச் செய்வோம்,..

**பாடலின் தலைப்பு**:--------------------------

**( பா நயம் பாராட்டல் -முன்னுரையில் எழுத வேண்டிய ஆசிரியர் குறிப்பு )**

| | பாரதியார் | பாரதிதாசன் | நாமக்கல்கவிஞர் | கவிமணி |
|---|---|---|---|---|
| இயற்பெயர் | சுப்பிரமணியன் | சுப்புரத்தினம் | இராமலிங்கம் | தேசிகவினாயகம் |
| தந்தையார் | சின்னச்சாமி | கனகசபை | வேங்கடராமன் | சிவதாணு |
| தாயார் | இலக்குமி | இலக்குமி | அம்மணி | ஆதிலெட்சுமி |
| பிறந்தஊர் | எட்டயபுரம் | புதுச்சேரி | மோகனூர் | தேரூர் |
| (மாவட்டம்) | (தூத்துக்குடி) | ---------- | ( நாமக்கல் ) | (கன்னியாகுமரி ) |
| சிறப்புப்பெயர் | தேசியக்கவி | புரட்சிக்கவி | காந்தியக்கவிஞர் | கவி மணி |

----------------------------------------------------------------------------------------------------